பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை 20.12.2022 கதிர் 296

## தேர்தலைப் பிற்போட நாம் விரும்பவில்லை

'மொட்டு'க் கட்சி கூறுகின்றது




ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி தேர்தலை கண்டு அஞ்சவில்லை. தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே 2

## மிருசுவில் படுகொலையின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல்



யாழ்., தென்மராட்சி, மிருசுவில் படுகொலையின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை மிருசுவில் தேவாலயத்துக்கு முன்பாக நடைபெற்றது.

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிசோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாயார் ஈகைச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் 2

## கிளி. மத்திய கல்லூரிக்கு பஸ் வழங்கிவைத்த சஜித்







எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் 45 ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் இன்று கிளிநொச்சி 8

## தமிழர் விரும்பும் தீர்வையே நாங்கள் மனதார ஏற்போம்!

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு தருவதாக இருந்தால் அந்தத் தீர்வு எமது மக்கள் விரும்பும் சமத்துவம், ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு நிறைந்ததாகக் காணப்பட வேண்டும். அப்படியான தீர்வையே நாம் மனதார ஏற்றுக்கொள்வோம். 8

## தீர்வுக்கான பேச்சில் சொல்ஹெய்ம் மறைமுகமாக மத்தியஸ்தம் வகிப்பு?



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் சர்வகட்சி கலந்துரையாடலுக்கான மறைமுக மத்தியஸ்தராக எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது நோர்வே சார்பில் சமாதானத் தூதுவராகப் பணியாற்றியிருந்தவர் 2

## விடைபெறும் ஹனா சிங்கரை வாழ்த்தி அனுப்பிய ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையில் ஜனாதிபதி ரணில் 2

## தினேஷ் ஷாப்டர் படுகொலை குறித்து மனைவி உட்பட 40 பேரிடம் விசாரணை

நெருங்கிய உறவினர்கள் உள்ளிட்ட 15 பேர் மீது சந்தேகம்




தனியார் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளரான பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் படுகொலை தொடர்பாக அவரது மனைவியிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலை 4 மணித்தியாலங்களுக்கு மேலாக அவரின் வாக்கு மூலங்களைப் பதிவு 2

## 54 அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்தில்

வருடாந்தம் 86 ஆயிரம் கோடி ரூபா இழப்பு

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் உள்ளிட்ட 54 8

## பருத்தித்துறை நகர சபைக்கு 27 இல் புதிய தலைவர் தெரிவு

பருத்தித்துறை நகர சபை தலைவராக இருந்த யோ. இருதயராஜா, பதவி விலகல் கடிதத்தை ஒப்படைத்துள்ள நிலையில், புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு 2




## மீனவர் மாயம்!

படகு மாத்திரம் மீட்பு

யாழ்., பலாலி வடக்கு, அன்ரனிபுரத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் இன்னமும் கரை 2

## தூக்கில் தொங்கிய நிலையில் 17 வயது சிறுமி சடலமாக மீட்பு

வவுனியா, ஓமந்தையில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

த.மதுசாலினி (வயது 17) என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி இரவு வீட்டாருடன் படுக்கைக்குச் சென்றுள்ளார். 2

## மீனவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

49 வயதுடைய இராயப்பு றொபேட் கெனடி என்ற மீனவரே காணாமல் போயுள்ளார் என்று பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டித் துறைமுகத்திலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தொலைவில், காணாமல்போனதாகக் கூறப்படும் மீனவரின் படகு கவிழ்ந்திருந்த நிலையில் கடற்றொழிலாளர்கள் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மீனவர் காணாமல்போன நிலையில், அவர் பணித்த படகு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிதாகத் தெரிவு செய்யப்படும் தலைவர் எதிர்வரும் 30ஆம் திகதியளவில் வரவு – செலவுத் திட்டத்தை முன்வைக்கும் வகையில் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## தூக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில் அதிகாலை அருகிலிருந்த அறையில் தூக்கிலிடப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்று பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தினேஷ் ஷாப்டர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர். தினேஷ் ட்டர் கொலைச் சம்பவம் தொடர்பில் 15 பேர் சந்தேகிக்கப்படுகின்றனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையில் 40 இற்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது எனவும், ஷாப்டரின் நெருங்கிய உறவினர்கள் சிலர் குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## விடைபெறும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்தித்தார்.

ஹனா சிங்கருடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, இலங்கைக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், அவரது எதிர்கால பணிகளுக்காக வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

ஹனா சிங்கர், 2018 செப்டம்பர் 07 ஆம் திகதி முதல் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளராகச் செயற்பட்டார்.

## தீர்வுக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிக் சொல்ஹெய்ம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் காலநிலை தொடர்பான தூதுவராக அவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

கடந்த 13ஆம் திகதி இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய சர்வகட்சி கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார் சொல்ஹெய்ம். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்16ஆம்திகதிதமிழ்முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனையும் அவர் சந்தித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

சர்வகட்சி கலந்துரையாடலுக்கான பின்னணி ஏற்பாடுகளைத் தொடர்வது பற்றியே இந்தப் பேச்சுக்களின்போது அதிகளவு அக்கறையை எரிக் சொல்ஹெய்ம் வெளிப்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. மறைமுகமான மத்தியஸ்தராகவே அவரது இந்தச் சந்திப்புக்கள் அமைந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தேர்தலைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளோம் – என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட நாம் துணை நிற்கவில்லை. தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கும் இல்லை. ஆனால், தேர்தலை எதிர்கொள்வதற்கு அஞ்சும், எதிரணிகளே இந்த விடயத்தில் வதந்திகளைப் பரப்பி வருகின்றன – என்றும் மொட்டுக் கட்சி பொதுச்செயலாளர் சுட்டிக்காட்டினார்.

## மிருசுவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

போர் காரணமாக மிருசுவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி பகுதியில் வசித்து வந்தவர்களில் 9 பேர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த தமது வீடுகளைப் பார்வையிட கடந்த 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி சென்ற வேளை அவர்களை இராணுவத்தினர் கைது செய்து சித்திரவதைகளுக்குள்ளாகி, 8 பேரை படுகொலை செய்து மலசலகூடக் குழிக்குள் வீசியிருந்தனர்.

அதன்போது காயங்களுடன் அங்கிருந்து பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர்தப்பிவந்துஉறவினர்களுக்குத் தகவல் தெரிவித்தார்.

ஞானச்சந்திரன் , சாந்தன், ஞானபாலன் ரவிவீரன், செல்லமுத்து தெய்வகுலசிங்கம், வில்வராஜா பிரதீபன், சின்னையா வில்வராஜா, நடேசு ஜெயச்சந்திரன் மற்றும் வில்வராஜா பிரசாத் ஆகிய 8 பேரே படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, 14 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் 9 பேர் விடுவிக்கப்பட்ட நிலையில் 5 இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

பின்னர் கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று, 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி அன்று 4 இராணுவத்தினருக்கு எதிராகப் போதிய சாட்சி ஆதாரங்கள் இல்லை என அவர்களை வழக்கில் இருந்து விடுவித்த மன்று , சுனில் ரத்நாயக்க என்பவரைக் குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனை தீர்ப்பளித்தது.

அந்நிலையில் 2020ஆம் ஆண்டு மார்ச்மாதம்26ஆம்திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச , மரணதண்டனைக் கைதியான சுனில் ரத்நாயக்கவுக்குப் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## மோசமாகும் நிலைமை

இலங்கை போதைப் பொருள் கடத்தலின் கேந்திர நிலையமாக – மையமாக – மாறி வருவது குறித்து அதிர்ச்சியான செய்திகள் வெளியாக தொடங்கி இருக்கின்றன.

போதைப்பொருள்கள் கடத்தலைத் தடுக்கும் விவகாரத்தில் இங்கு தும்பை விட்டு வாலைப் பிடிக்கும்வேலையேநடக்கின்றது. பெருந்தொகையான போதைப்பொருள்கள் நாட்டுக்குள் கடத்தப்படும் போது அவற்றைப் பிடிப்பதை விட்டுவிட்டு சிறியளவிலான போதைப்பொருள்களைப் பிடித்து படம் காட்டவேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் தெரிவித்திருக்கின்றார். அது உண்மையான – யதார்த்தபூர்வமான – கூற்று.

“போதைப்பொருள் வர்த்தகத்தில் பெரும் புள்ளிகளும் பிரபலங்களும் ஈடுபடுகின்றனர். போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பான விவரங்களும் பொலிஸாரிடம் இருக்கும்போது போதைப்பொருள் தொடர்பாக பாடசாலை செல்லும் மாணவர்களை இலக்கு வைத்து சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. வானத்தில் இருந்து விழும் ரொபி போல நினைத்து இந்த சோதனை நடவடிக்கையை செய்கிறார்களோ தெரியவில்லை. பாடசாலை மாணவர்களின் புத்தகப்பையை சோதிப்பது மாத்திரம் பொலிஸாரினதோ இராணுவத்தினரோ வேலை அல்ல என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். பெருந்தொகையான போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடல் வழியாகவோ ஆகாய வழியாகவோ வரும்போது அவற்றை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”– என்று அவர் கூறுவது பொதுவாக மக்களின் கருத்து நிலைப்பாடுதான்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தலின் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதான அதிர்ச்சித் தகவலை சர்வதேச பொலிஸான இன்டர்போல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஐஸ் என்ற போதைப்பொருளை கடத்தும் பிரதான கேந்திர நிலையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இன்டர்போலினால் மேற்கொள்ளப்பட்ட லயன்ஷிப் எனப்படும் நடவடிக்கையின் போது இந்த தகவல்கள் அம்பலமாகியுள்ளதாம்.

ஆசிய பிராந்திய வலய நாடுகளில் அதிகளவு ஐஸ் போதைப்பொருள் கையாளப்படுவதாகவும், இதற்காக பல்வேறு புதிய வழிகள் உருவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் இரசாயன கலவைகள் மிகவும் ஆபத்தானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐஸ் போதைப்பொருளுடன் தொடர்புடைய 24 இலங்கையர்கள் வெளிநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர் எனத் தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்ட ஒப்பந்தம் வவுனியாவில் முன்னெடுக்க பல்கலையில் கைச்சாத்து

இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒப்பந்தம் ஒன்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) வவுனியா பல்கலைக்கழகத்தில் வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி வை. நந்தகோபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழகமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் இணைந்து இதில் கைச்சாத்திட்டன.

இதன்படி, வடக்கு கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சியொன்றை வழங்கி எதிர்கால் சமூகமட்டத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ளக்கூடிய தலைவர்களை உருவாக்கும் நோக்கோடு இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தத்தில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரி. மங்களேஸ்வரன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் திட்ட முகாமையாளர் ஜே. யூட் வோல்டன் ஆகியோர் கையொப்பமிட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கனடிய தமிழ்க் காங்கிரஸால் மருத்துவ உதவி!

கனேடியத் தமிழர்கள் ஒரு கோடி ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்குகின்றனர்.

கனடிய தமிழ் காங்கிரஸ் ஆண்டுதோறும் தமிழ் கனேடியர்களின் நடைபவனி ஊடாக பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகிறது. இலங்கையின் மோசமான நிதிச் சரிவால் உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனித நேய அடிப்படையில் இந்த ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி கனடிய தமிழ் காங்கிரஸின் 14 ஆவது வருடாந்த தமிழ் கனேடிய நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள 6 வைத்தியசாலைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவப் பொருள்களை வழங்குவது எனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் முதற்கட்டமாக கனடிய தமிழ் காங்கிரஸால் ஒழுங்கமைக்கப்பட்ட முதற் தொகுதி மருந்துப் பொருள்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கையளிக்கப்படவுள்ளன.

## உள்நாட்டு வருவாய் சட்டம் அமுலுக்கு!

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்ட நிலையில் உள்நாட்டு வருவாய் (திருத்தம்) சட்டம் நேற்று (திங்கட்கிழமை) முதல் அமுலுக்கு வந்தது.

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற் றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 83 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் கிடைத்தன.

அப்போது எதிர்க்கட்சிகள் மூன்றாம் வாசிப்புக்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என கோரியது. அதற்கமைய ஆதரவாக 79 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் பதிவாகின.

அதன்படி, இந்த சட்டமூலம் 2022 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் (திருத்தம்) சட்டமாக நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

## போதைப்பொருள் மாபியாக்களின் வலையில் எமது இளம் சமுதாயம் சிக்கிவிடக் கூடாது!

### ராமேஷ்வரன் எம்.பி. வலியுறுத்து

கல்வியால் மட்டுமே மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்த இலக்கை அடைவதற்காகவே தற்போதைய சூழ்நிலையில் மலையகக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து பயணிக்கின்றன என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பகமுவ பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவருமான எம்.ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஹற்றன் வலய அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எதிர்நோக்கும் பிரச்சிகைள் தொடர்பான சந்திப்பும், கலந்துரையாடலும் ஹற்றன் ஹைலண்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்குமார் கலந்துகொண்டதோடு, சிறப்பு அதிதியாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பகமுவ பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவருமான எம்.ராமேஷ்வரன் கலந்து கொண்டார்.

அத்தோடு, கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான கல்வி பணிப்பாளர் சு.முரளிதரன், ஹற்றன் வலய கல்வி பணிப்பாளர் திருமதி ஏ.சத்தியேந்திரா, உதவி கல்வி பணிப்பாளர்கள் திருமதி, லக்ஷமி பிரபா, என்.சிவகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அன்றும் இன்றும் என்றும் கல்விக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் வழங்கும்.

ஏனெனில் கல்வியால் மட்டுமே நாம் முன்நோக்கியும் எமது சமூகத்தை முன்னேற்றகரமான பாதையில் அழுத்திச் செல்லவும் வழி வகுக்கும் என உறுதியாக நம்புகின்றோம்.

எனவேதான் கல்வி உரிமைகளை கல்வி சார் விடயங்களை வென்றெடுப்பதற்காக நாம் கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம்.

மத்திய ஆட்சியிலும் சரி அதேபோல மாகாண ஆட்சியிலும் சரி கல்விசார் ஆளனியையும் அதேபோல கல்விசார் வளங்களையும் நாம் போராடியே பெற் றுள்ளோம். எமக்கான வளங்களையும் வசதிகளையும் அவ்வளவு எளிதில் தந்து விட மாட்டார்கள். இதற்காக அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் காங்கிரஸ் கடுமையாகப் போராடி உள்ளது என்பதை இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன்.

அதன் ஒரு பயனாக இன்று பாடசாலைகளில் சிறந்த பெருவேறு வருவது எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. எதிர்காலத்தில் கல்வி வளர்ச்சியில் மேலும் பல முன்னேற்றங்கள் வேண்டும். அதற்காக எம்மாளான அனைத்து ஒத்துழைப்புகளையும் நாம் நிச்சயம் வழங்குவோம். அதேவேளை இன்று பாடசாலைகளில் மாண வர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை ஏற்பட்டுள்ளது பெரும் கவலைக்குரிய அதேபோல் வேதனைக்குரிய விடயமாகும்.

இதற்கு நாம் நிச்சயம் முடிவு கட்டிவிட வேண்டும். அதற்காக எமது பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அண்மையில் பொலிஸார் உள்ளிட்ட பொலிஸ் நிலைய பொதுப்பதிகாரிகள், பாதுகாப்பு தரப்பினர்கள், அதிபர்களை அழைத்து நாம் கூட்டம் ஒன்று நடத்தினோம்.

பாடசாலைகளில் தேவையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் இதற்கான அனுமதியை ஆளுநர் ஊடாக பொலிஸாருக்கு பெற்று தரப் படும் எனவும் நாம் கூறியுள்ளோம். எமது சமூகம் கல்வியால் மட்டுமே முன்னேற முடியும். எனவே, இந்த போதைப்பொருள் மாப்பியாக்கள் போன்றவர்களின் வலையில் எமது சமுதாயம் சிக்கிவிடக்கூடாது என்பதுதான் எங்களுடைய ஏகோபித்த கோரிக்கையாக இருக்கின்றது அதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளையும் நாம் நிச்சயம் மேற்கொள்வோம். – என்றார்.

# கனடா அடுக்குமாடிக் குடியிருப்பில் மர்மநபர் துப்பாக்கிச் சூடு; ஐவர் பலி

## கொலையாளியைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்







டொரண்டோ, டிச.20

கனடாவில் அடுக்குமாடி குடியிருப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 5பேர் பலியாகியுள்ளனர் அத்துடன், துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட கொலையாளியை பொலிஸார் சுட்டுக்கொன்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம் டொரண்டோ நகரில் உள்ள ஆடம்பரமான அடுக்குமாடி குடியிருப்பொன்றில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர் ஒருவர் திடீர் துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பீதியடைந்த குடியிருப்புவாசிகள் அங்கும், இங்குமாக ஓட்டம் பிடித்தனர். மர்ம நபரின் துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர் என்று தெரிவிக்கப்படுவதுடன், ஒருவர் படுகாயம் அடைந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இதனிடையே இந்த துப்பாக்கிச்சூடு குறித்த தகவல் அறிந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்திய நபரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். தாக்குதலில் ஈடுபட்ட நபர் யார்? அவர் அந்த குடியிருப்பில் வசித்து வந்தவரா? என்கிற தகவல்களை பொலிஸார் வெளியிடாத நிலையில், அடுக்குமாடி குடியிருப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் பலியான சம்பவம் கனடாவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## பாக். பயங்கரவாத எதிர்ப்பு நிலையம் ஒன்று பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்தது

### 2 பொலிஸார் மரணம்; ஏனையோர் பணயக் கைதிகள்



இஸ்லாமாபாத், டிச.20

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ள பன்னு நகரில் ராணுவ கன்டோன்மெண்ட் அமைந்துள்ளது. இதன் வளாகத்தில் பயங்கரவாத எதிர்ப்பு மையம் உள்ளது. அந்தப் பகுதியில் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட பலர் அடைத்து வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில், ஒரு பயங்கரவாதியிடம் நேற்று முன்தினம் பொலிஸார் விசாரணை நடத்திக் கொண்டிருந்தபோது அவர் திடீரென பொலிஸ்காரர் ஒருவரின் துப்பாக்கியை பறித்து சரமரியாக சுட்டார். இதில் 2 பொலிஸார் பலியாகினர். அதனைத் தொடர்ந்து அந்த பயங்கரவாதி அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த மற்ற பயங்கரவாதிகளை விடுவித்தார்.

பின்னர் அந்த பயங்கரவாதிகள் அனைவரும் சேர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு மையத்தைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அங்கிருந்த பொலிஸார் அனைவரையும் பணயக் கைதிகளாக பிடித்தனர். இதையடுத்து அங்கு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

அவர்கள் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் பத்திரமாக மீட்பதற்காக பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தை நேற்றும் தொடர்ந்ததாகவும், ஆனால் எந்த சுமுகமான முடிவும் எட்டப்படவில்லை என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கைபர் பக்துன்வா மாகாணத்தின் வடக்கு வஜிரிஸ்தான் மாவட்டத்தில் நேற்றுக் காலை பாதுகாப்பு படை வீரர்கள் சென்ற வாகனத்தின் மீது தற்கொலைப்படை பயங்கரவாதி ஒருவர் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை மோதி வெடிக்க செய்ததில் 4 வீரர்கள் படுகாயம் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## ஈராக்கில் பயங்கரவாதிகளின் அதிரடியில் 9பொலிஸார் பலி

பாக்தாத், டிச.20

ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே உள்ள கிர்குக் நகரில் பொலிஸார் சிலர் கவச வாகனத்தில் சென்று கொண்டிருந்த நிலையில், அங்குள்ள சலால் அல் மாதர் கிராமம் அருகே சென்றபோது பொலிஸ் வாகனத்தின் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். வாகனத்தின் மீது குண்டுகளை வீசி எறிந்தும், சரமாரியாக துப்பாக்கியால் சுட்டும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த கொடூர தாக்குதலில் 9 பொலிஸார் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 2 பொலிஸார் படுகாயம் அடைந்தனர். பின்னர், அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்பு பாக்தாத்தில் சாலையோரம் பயங்கரவாதிகள் புதைத்து வைத்திருந்த குண்டு வெடித்து சிதறியதில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தமையும், இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றதும் குறிப்பிடத்தக்கது.

## பனிமூட்டத்தால் நேருக்கு நேர் மோதிய பஸ்கள்: எண்மர் பலி!

இஸ்லாமாபாத், டிச.20

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடும் பனிமூட்டம் காரணமாக இரு பஸ்கள்நேருக்கு நேர் மோதிய விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ராஜன்பூர் மாவட்டத்தில் உள்ள சிந்துப்நெடுஞ்சாலையில் கடும் மூடுபனியால் மூடப்பட்டிருந்தது. இதனால் சாலையில் எதிரில் வரும் வாகனங்களைக் கூடக் கணிக்கமுடியவில்லை. இந்தநிலையில் எதிரெதிர் திசையில் இருந்த வந்த பஸ்கள் ஒன்றொடொன்று மோதி விபத்திற்குள்ளாகின.

இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர். ஒரு பஸ் பொவரில் இருந்து கராச்சிக்கும், மற்றொரு பஸ் ராஜன்பூருக்குச் சென்று கொண்டிருந்தன. விபத்தில் காயமடைந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட பலர் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்க மருத்துவமனை நிர்வாகத்திற்கு பஞ்சாப் முதலமைச்சர் பெர்வைஸ் எலாஹி உத்தரவிட்டுள்ளார். பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களின் சில பகுதிகள் தற்போது அடர்ந்த பனிமூட்டம் காரணமாக போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அடர்ந்த பனிமூட்டம் காரணமாக சிந்து நெடுஞ்சாலையின் சில பகுதிகளில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்து மற்றப் நெடுஞ்சாலைகளுக்கு திருப்பி விடப்பட்டுள்ளதாகவும் நெடுஞ்சாலையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.








# இந்தியப் படைகளின் தாக்குதலில் ஜம்முவில் 3 பயங்கரவாதிகள் சாவு

ஸ்ரீநகர், டிச.20

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் காஷ்மீர் பொலிஸார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் சிலர் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, பாதுகாப்பு படையினர், காஷ்மீர் பொலிஸாருடன் இணைந்து அப்பகுதியில் இன்று காலை தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

சோபியான் மாவட்டம் சைனாபுரா நகரில் முன்ஜா மார்க் என்ற பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது, அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த தாக்குதலையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த பாதுகாப்பு படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையே சில மணி நேரம் துப்பாக்கிச்சண்டை நீடித்தது.

இந்த மோதலில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 3 பயங்கரவாதிகளும் லஷ்கர் – இ – தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

என்கவுண்டர் நடைபெற்ற பகுதியில் மேலும் சில பயங்கரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளதால் அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை சுவாமி தரிசனத்துக்கான உடனடி முன்பதிவு திடீரென நிறுத்தம்

## கூட்ட நெரிசலால் இந்த முடிவாம்



சபரிமலை, டிச.20

மண்டல, மகர விளக்கு பூஜைக்காக சபரிமலை கோவில் நடை கடந்த மாதம் 16ஆம்திகதிதிறக்கப்பட்டுதினமும்பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.வ்கடந்த 2 ஆண்டுகள் கொரோனா கட்டுப்பாடு காரணமாக சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் குறைவாக இருந்தது. இதனால் லட்சக்கணக்கான பக்தர்கள் பூஜை காலங்களில் அய்யப்பனை தரிசனம் செய்ய முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர். இந்த நிலையில் இந்த வருட பூஜைகளையொட்டி கட்டுப்பாடுகள் முற்றிலும்

தளர்த்தப்பட்டமையால் நடை திறந்த நாள்முதல்தினமும்பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்திற்காக செல்கிறார்கள்.

ஒன்லைன் முன்பதிவு மற்றும் உடனடி முன்பதிவு மூலம் தரிசனம் செய்யும் நடைமுறை பின்பற்றப்படுகின்ற நிலையில், இதில் ஒரு சில நாள்களில் முன்பதிவு செய்யும் பக்தர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேல் இருந்தது. இதுதவிர நிலக்கல் உள்பட பல இடங்களில் உடனடி முன்பதிவு மூலமும் பக்தர்கள் தரிசனத்துக்கு திரண்டதால் சபரிமலையில் கட்டுக்கடங்காத கூட்டம் அலைமோதியது. இந்நிலையில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதனால் சிறு குழந்தைகள், 50 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர்.

இதன் காரணமாக சபரிமலை நிர்வாகத்தினர் விடுத்துள்ள அறிவிப்பில்,

சபரிமலையில் ஒன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 90 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் நேற்றைய தினம் ஏற்கனவே (கட்டுப்பாடுக்கு முந்தைய) 1 லட்சத்து 4 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்ய முன்பதிவு செய்தவர்கள்.

இதனால் அவர்களுக்கு அனுமதி வ்வழங்கப்பட்டது. தற்போது கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் உடனடி தரிசன முன்பதிவு வசதி முறை இரத்து செய்யப்பட்டுள்ளது என்றார்.

# சீனாவின் ஆக்கிரமிப்பை இந்தியா அனுமதிக்காது!

## ஜெய்சங்கர் திட்டவட்டம்



புதுடெல்லி, டிச.20

கிழக்கு லடாக்கை தொடர்ந்து அருணாச்சலப்பிரதேசத்தில்நடந்துள்ள சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை இந்தியாவைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிஇருக்கின்ற நிலையில், இதனால் சீனாவுடனான எல்லைப்பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன, அத்துடன் சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இந்திய இராணுவம் அனுமதிக்காது என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

டெல்லியில் நடந்த இந்தியா, ஜப்பான் கருத்தரங்கில் பங்கேற்று பேசும் போது இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சீன எல்லை யில்? முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிக அளவிலான இராணுவத்தைக் குவித்திருக்கிறோம். 2020ஆம் ஆண்டு முதல் சீனா குவித்து வரும்வ்படைகளுக்குப் பதிலடியாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

பிரதமர் மோடியின் உத்தரவின் பேரில் இந்தப் படைக்குவிப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளது. நாங்கள் சொன்னதால்தான் இராணுவம் அங்கு சென்றிருக்கிறது. ராகுல் காந்தி போகச் சொன்னதால் இராணுவம் அங்கு செல்லவில்லை. இந்தியப் பிரதமர் அவர்களைப் போகச் சொன்னதால் இராணுவம் அங்கு சென்று இருக்கிறது.

அசல் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோடு பகுதியில் நிலவும் இயல்பு நிலையை ஒரு தலைப்பட்சமாக மாற்றும் எந்த முயற்சியையும் முறியடிக்க இந்திய இராணுவம் தயாராக உள்ளது. அங்கு சீனாவின் ஆக்கிரமிப்பை அனுமதிக்கக்கூடாது என்பதில் இராணுவம் உறுதியாக இருக்கிறது. எல்லையில் அத்துமீற எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டோம் என்பது இந்திய அரசின் கடமை மற்றும் இந்திய

இராணுவத்தின் கடமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகும்.

இந்தப் பரபரப்பான சூழலில் சீனாவில் இருந்து ஏன் இறக்குமதிகள் அனுமதிக்கப்படுகின்றன? என்று கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால் உற்பத்தித் துறையில் போதிய கவனம் செலுத்தாததால் அந்த நாட்டிலிருந்து இந்தியா தொடர்ந்து இறக்குமதி செய்கிறது. 30 ஆண்டுகளாக உங்கள் தொழிலுக்கு கொடுக்கவ்வேண்டிய ஆதரவையும், பாதுகாப்பையும் நீங்கள் கொடுக்கவில்லை. இப்போதுதான்வ்நீங்கள் அதைச் செய்யத் தொடங்கி இருக்கிறீர்கள். 30 ஆண்டுகளில் செய்ததை

இப்போது 5 அல்லது 10 ஆண்டுகளில் மாற்ற முடியாது என்று ஜெய்சங்கர் கூறியுள்ளார்.












# டார்க் பவுண்டேஷனினால் கல்முனையில் 350 மாணவருக்குப் பாதணிகள் வழங்கல்

## சாதனையாளர்களும் கௌரவிப்பு

கல்முனை கல்வி வலயத்திற்க்குட்பட்ட 28 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 350 ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான பாதணிகள் வழங்கும் நிகழ்வும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதனை படைத்த மாண வர்களின் கௌரவிப்பும் டார்க் (DArk) பவுண்டேஷனின் பூரண அனுசரணையில்,அதன்தவிசாளர்டாக்டர்எம்.ஜே.கே.எம்.அர்த் காரியப்பர் தலைமையில் அதன் பொது செயலாளரும், ஊடகவியலாளரும், அல்- மீசான் பவுண்டேன் தலைவருமான நூறுல்ஹுதா உமரின் ஒருங்கமைப்பில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத் தில் நேற்றுவ்மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ் கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சகுதுல் நஜீம், கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம் எம் ஆஷிக் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளர்களான நஸ்மியா சனூஸ், யு.எல். சாஜித், கோட்டக்கல்வி அதிகாரி வீ.எம். ஸம்ஸம், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், கல்முனை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சாரிக் காரியப்பர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். பஸ்மீர் உட்பட கல்விமான்கள், புத்திஜீவிகள், துறைசார்ந்த முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் தேசிய சாதனை புரிந்த கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாண வர்கள், சர்வதேச மட்டத்தில் சாதனை படைத்த மாணவி, மாவட்ட அளவில் முதன்மை நிலை பெற்ற மாணவர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

# பாலைநகரில் 11 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் இணைப்பு வழங்கல்



கோறளைப்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் கிராமத்தில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் இணைப்பை வழங்கும் திட்த்தைஅனீஸ்ஹாஜியார்பவுன்டேன்முன்னெடுத்து வருகின்றது. இதன் ஆரம்பக் கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 11 குடும்பங்களுக்கு இணைப்புக்கான பணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டு வழங்கும் நிகழ்வு பாலைநகர் றஹ்மானியா ஜும்ஆ பள்ளி வாயலில் இடம்பெற்றது.

பள்ளிவாயல் செயலாளர் ஏ.யூ.அசனார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக அனீஸ் ஹாஜியார் பவுன்டேனின் திட்ட இணைப்பாளர் ஆர்.எம் புஹாரி, ஓட்டமாவடி பிரதேச சபையின் தியாவட்டவான் வட்டாரத்துக்கான உறுப்பினர் ஏ.ஜி அஸீஸுல் றஹீம், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எம் அன்வர் சதாத், ஓட்டமாவடி வர்த்தக சங்க தலைவர் எம்.ஏ.சி.எம் நியாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சமூக மேம்பாட்டிற்கு அடிப்படை கல்வியே!

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் உரை





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கல்விதான் ஒரு சமூக மேம்பாட்டிற்கு அடிப்படையென கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு கல்லடி நொச்சிமுனையில் அமைந்துள்ள கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஜோதிராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிவநேசத்துரை சந்திரகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன், சிரேஷ்ட சமூக சேவகர் மற்றும் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள், துறைசார் அதிகாரிகள், சாதனையாளர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முள்ளிப்பொத்தானையில் பெருவெள்ளம் நிரம்பியது

(ஹஸ்பர்)

அடை மழை காரணமாக திருகோணமலை முள்ளிப் பொத்தானை பகுதியில் உள்ள தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுக் காலை முதல் இம் மழை தொடர்ந்தும் பெய்கிறது. இதனால் முள்ளிப்பொத்தானை நிஸ்கோ வீதியும் அப்பிரதேசமும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன. மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir



# திருச்சி சிறப்பு முகாமில் இருந்த இலங்கையர்கள் 9 பேர் கைது!




விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு புத்துயிரூட்டுவதற்காக ஆயுதங்கள், போதைப் பொருள்களை கடத்த முயன்ற வழக்கில் இலங்கையைச் சேர்ந்த 9 பேரை என்ஐஏ அதிகாரிகள் திருச்சி சிறப்பு முகாமில் வைத்து கைது செய்துள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை தங்கவைப்பதற்காக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் செயற்பட்டு வருகிறது.

இங்கு இலங்கைத் தமிழர்கள் 80 பேர் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிரூட்டும் வகையில் பாகிஸ்தானிலிருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு ஆயுதங்கள், போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றமை தொடர்பாக என்ஐஏ(தேசிய புலனாய்வு முகாமை) ஜூலை 8 ஆம் திகதி தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்தது.

இது தொடர்பாக திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களான குணசேகரன், புஷ்பராஜா பூக்குட்டி கண்ணா மற்றும் ஆயுதங்கள், போதைப் பொருள் விற்பனையாளரான பாகிஸ்தானைச் சேர்ந்த ஹாஜி சலீம் உள்ளிட்டோருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரியவந்ததால், தமிழகத்தில் சென்னை, திருப்பூர், செங்கல்பட்டு உட்பட 22 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் ஜூலை 20 ஆம் திகதி சோதனையில் ஈடுபட்டனர்.

திருச்சி சிறப்பு முகாமில், என்ஐஏ டிஐஜி காளிராஜ் மகேஷ்குமார் தலைமையில் எஸ்.பி தர்மராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் கமாண்டோ படையினரின் பாதுகாப்புடன் சோதனை நடத்தினர்.

அப்போது, சிறப்பு முகாமிலிருந்து தொலைபேசிகள், சிம் கார்டுகள், பென்டிரைவ், ஹார்ட் டிஸ்க், லேப்டாப், வைஃபை மோடம் மற்றும் முக்கிய ஆவணங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

அவற்றை கேரளா கொண்டு சென்ற என்ஐஏ அதிகாரிகள், தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், எஸ்.பி. தர்மராஜ் தலைமையில் என்ஐஏ அதிகாரிகள் குழுவினர் 8 பேர் நேற்று(திங்கட்கிழமை) காலை மீண்டும் திருச்சி சிறப்பு முகாமுக்கு சென்றனர்.

இதன்போது அங்கிருந்த இலங்கையைச் சேர்ந்த குணசேகரன் பிரேம்குமார், புஷ்பராஜா பூக்குட்டி கண்ணா, முகமது ஆஸ்மின், அழக பெருமக சுனில் காமினி பொன்சேகா கோட்ட காமினி, ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ பொம்மா, தனுகா ரோஷன், லடியா, காமேஷ் சுரங்கா பிரதீப் வெள்ள சுரங்கா, திலீபன் ஆகிய 9 பேரிடம் மீண்டும் விசாரணை நடத்தினர்.

அப்போது, ஏற்கெனவே தொடரப்பட்ட ஆயுதக் கடத்தல் வழக்கில், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருப்பதால், 9 பேரையும் கைது செய்ய வந்திருப்பதாக என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, வெளிநாட்டினருக்கான சிறப்பு முகாம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் என்ஐஏ எஸ்.பி தர்மராஜ் உள்ளிட்ட அதிகாரிகள், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத் துக்குச் சென்று ஆட்சியர் மா.பிரதீப் குமாருடன் ஆலோசனை நடத்தினர்.

அப்போது, 9 பேர் மீதுள்ள வழக்கு விவரங்கள், கைது செய்வதற்கான உரிய ஆவணங்களை ஒப்படைக்கும்படி ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

அதன்பேரில், என்ஐஏ அதிகாரிகள் அளித்த ஆவணங்களை ஏற்று, குணசேகரன் உள்ளிட்ட 9 பேரையும் கைது செய்து சிறப்பு முகாமிலிருந்து அழைத்துச் செல்ல ஆட்சியர் அனுமதியளித்தார்.

இதையடுத்து, குணசேகரன் உள்ளிட்ட 9 பேரையும் என்ஐஏ அதிகாரிகள் கைது செய்தனர். பின்னர் அனைவரும் பலத்த பாதுகாப்புடன் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## தொடர் கனமழை காரணமாக வவுனியாவில் வீடுகள் பாதிப்பு!

வவுனியாவில் பெய்து வரும் கனமழை காரணமாக 5 வீடுகளுக்கு வெள்ள நீர் புகுந்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வவுனியாவில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை முதல் மழை பெய்து வருகின்றது. மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக, வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் 5 வீடுகள் அதிகமாக பாதிப்படைந்துள்ளதுடன், மேலும் பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

இதன் காரணமாக மேற்படி வீடுகளில் வசித்து வரும் மக்கள், நோயாளர்கள், மாணவர்கள், குழந்தைகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மக்களின் நிலைமை தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் கவனம் செலுத்தியுள்ளது.

## அந்தோணிபுரம் பகுதிக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் யாழ். பலாலி பகுதியில் மாயம்!

யாழ்ப்பாணம் – பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அந்தோனிபுரம் பகுதியில் மீன்பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போயுள்ள மீனவர் அந்தோணிபுரத்தை சேர்ந்த 56 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மீனவர் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அந்தோனிபுரம் கடற்றொழிலாளர் சங்கத்துக்குச் சொந்தமான படகில் அந்தோணிபுரம் பகுதிக்கு மீன்பிடிக்க சென்றுள்ளார். இதேவேளை இவ்வாறு காணாமல் போயுள்ள மீனவரை தேடும் நடவடிக்கையை கடற்படையினரும் பொலிஸாரும் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதைப் பாவனையிலிருந்து மாணவர்களை பாதுகாக்க ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி!

போதைப்பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்க ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை ஆரம்பிக்கும் நோக்கில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற போதைப்பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்பது தொடர்பில் இங்கு விவாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் 200 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில், மேல்மாகாணத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 75 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் ஊழல் ஒழிப்பு புதிய சட்டமூலங்கள் தொடர்பில் அரச சார்ப்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்து!





ஊழல் ஒழிப்பு புதிய சட்டமூலம் தொடர்பில் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக பெரு முயற்சியுடன் செயற்படும் அரச சார்ப்பற்ற நிறுவன பிரதிநிதிகளை அறிவுறுத்தும் நடவடிக்கை நீதி, சிறைச்சாலை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது சட்டமூலம் தொடர்பாக நீதி அமைச்சரால் அந்த நிறுவன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதுடன் ஊழல் மோசடி இடம்பெறுவதை தடுப்பதற்காக அரச சார்ப்பற்ற நிறுவன பிரதிநிதிகளால் ஆலோசனை மற்றும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தை அடிப்படையாகக்கொண்டு புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுடன் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன உட்பட நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நீதி அமைச்சின் செயலாளர், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுன் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன உட்பட அதிகாரிகள் மற்றும் சமூக நீதிக்கான தேசிய அமைப்பு, இலங்கை தொழில்சார் நிபுணர்களின் சங்கம், டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் மற்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய பிரதிநிதிகள், நீதி அமைச்சின் சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைவு திணைக்களம், ஊழல் மோசடி குற்றச்செயல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## 54 அரச......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச நிறுவனங்கள் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கி வருகின்றன என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த 54 நிறுவனங்களும் வருடாந்தம் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தில் இயங்குகின்றன என்றும், கடந்த வருடத்தில் இந்த அனைத்து நிறுவனங்களும் 86 ஆயிரம் கோடி ரூபா நட்டத்தில் இயங்கியுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, 420 அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் அரச பராமரிப்பில் உள்ளன என்றும், அரச நிறுவனங்களில் 32 நிறுவனங்கள் மோசடி நிறைந்ததாகக் காணப்படுகின்றன என்றும், அதற்கான தரவுகளைக் 'கோப்' அண்மையில் வெளியிட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் முன்னணியில் உள்ள நிறுவனங்களாக முறையே பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை மின்சார சபை ஆகியன இனங்காணப்பட்டுள்ளன என்றும், அந்த நிறுவனங்கள் கடந்த 3 வருடங்களில் 30 ஆயிரம் கோடி ரூபா நட்டமடைந்துள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.அதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 62 ஆயிரத்து 800 கோடி ரூபா நட்டமடைந்துள்ளது என்றும், ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் 24 ஆயிரத்து 800 கோடி ரூபாவும், மின்சார சபை 4 ஆயிரத்து 700 கோடி ரூபாவும் நட்டமடைந்துள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கிணங்க நட்டமடையும் 39 அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளி.மத்திய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை நிர்வாகத்திடம் பஸ்ஸை எதிர்க்கட்சித் தலைவர் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் விஜயராஜன் உள்ளடங்கலான கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

## தமிழர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று நடைபெற்றது. சொல்ஹெய்மின் கோரிக்கைக்கு அமைவாக இந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இதன்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

சந்திப்பின்போது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சி பேச்சுத் தொடர்பிலேயே அதிக நேரம் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு விடயம் தொடர்பில் எரிக் சொல்ஹெய்முடன் பொதுவாகப் பேசினோம்.

விசேடமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆரம்பித்துள்ள பேச்சு, தமிழ்த் தேசியப் பிரச்சினைகள் மற்றும் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் ஆராய்ந்தோம்.

ஜனாதிபதி, தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு தருவதாக இருந்தால் அந்தத் தீர்வு எமது மக்கள் விரும்பும் சமத்துவம், ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு நிறைந்ததாகக் காணப்பட வேண்டும். அப்படியான தீர்வையே நாம் மனதார ஏற்றுக்கொள்வோம் என்றுசொல்ஹெய்மிடம்தெரிவித்தேன் – என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கருத்துத்தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதயசுத்தியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாம் ஆதரவு வழங்குவோம்.

அரைகுறைத் தீர்வை ஏற்பதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை என்பதைச் சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டினோம் – என்றார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2022 இல் வெளியிடப்பெற்றது.